# இயேசுவும், ''மன்னிக்க முடியாத பாவமும்'' [மத்தேயு 12:22-35]

இந்தப் பாடத்தை ஒரு பரிசோதனையுடன் தொடங்க விரும்புகிறேன். கடந்த மாதம் முழுவதும் யானையைப் பற்றி நினைத்துப் பார்க்காதவர்கள் சற்று தலையசையுங்கள்.[1] அநேகமாய் நீங்கள் தலையசைத்திருப்பீர்கள். இப்போது பரிசோதனையின் இரண்டாவது கட்டம்: அடுத்த பதினைந்து வினாடிகளுக்கு யானையைப் பற்றி நினைக்காதீர்கள்.

இப்போது நீங்கள் யானையைப் பற்றி நினைத்திருப்பீர்கள் அல்லது அந்த நினைவோடு போரடியிருப்பீர்கள் அல்லவா? ஒரு வேளை நீங்கள் மாதக் கணக்கில் யானையைப் பற்றி நினைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், "யானையைப் பற்றி நினைக்காதீர்கள்" என்று நான் சொன்னவுடன் அந்த நினைவோடு ஒரு போராட்டம் செய்ய வேண்டியதாயிற்று.

நான் சிறுவனாயிருந்தபோது கீழ்க்கண்ட வேத வசனங்களை வாசித்தபோது என் நிலைமையும் இதே போலத்தான் இருந்தது.

> *ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், எந்தப் பாவமும், எந்தத்தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும், மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை (மத்தேயு 12:31-32).*

எனது வாழ்க்கையில் நான் பரிசுத்த ஆவிக்கு எதிராக எந்த ஒரு எண்ணமோ அல்லது வார்த்தை பேசுவதோ செய்ததில்லை.

இருப்பினும், இவ்வசனங்களைப் படித்தவுடன், ''பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான எண்ணம் எதுவும் என்னிடம் இருக்கக் கூடாது'' என்று எண்ணி, அந்த எண்ணத்துடன் போராடினேன். கெட்ட சிந்தனை உங்களிடம் எழும்பிற்று என்றால், நீங்கள் அதை மாற்ற விரும்பினால், வேறொன்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று நான் ஒரு நூலில் வாசித்திருக்கிறேன். மத்தேயு 12:31-32ஐ வாசித்த பிறகு சற்று நேரம் கழித்து "நட்சத் திரம் மின்னும் கொடி" என்ற பாடலை அநேகந்தரம் மௌன மாகப் பாடுவதில் நிறைய நேரம் செலவழித்தேன். இதன் மூலமாக பரிசுத்த ஆவிக்கு விரோதமாக எந்த எண்ணமும் இருதயத்தில் வரமாலிருந்தது.

நான் செய்த இந்தச் செயல் ஒருவேளை கோமாளித் தனமாய் இருக்கலாம், ஆனால் பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணம் என்ற மன்னிக்க முடியாத பாவத்தைப்பற்றி நாம் கற்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதை ஒரு வித்தியாசமான வழியில் நாம் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இப்பாடத்தின் கருத்தை நாம் பார்க்க வேண்டும், என்று நான் விரும்புகிறேன். இந்த தலைப்பு ஒரு விளக்கவுரைப் பாடமாக நடந்ததாக இதுவரை நான் கேள்விப் படவோ அல்லது படிக்கவோ கிடையாது. ஆனால் நாம் இவ்விதமாகவே இதை அணுகுகிறோம்.

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய் பேசுதல் பற்றி தன்னிடம் அநேகம் பேர் கேட்டதாகவும் அந்த நபர்கள் பின் வரும் நான்கு பிரிவில் அடங்குகிறார்கள் என்றும் மரித்த G.C. ப்ரூவர் என்பவர் கூறினார்: (1) அதைப்பற்றி அறியும் நேர்மையான விருப்பத்துடன் சிலர் இருந்தனர். (2) சிலர் ஆர்வ மிகுதியோடு இருந்தனர். (3) சிலர் தங்கள் சொந்த கோட் பாடுகளுக்கு உறுதிப்பாட்டை விரும்பினர் (4) சிலர் தாங்கள் தூஷணம் எதுவும் பேசிவிட்டோமோ என்று பயந்திருந்தனர். இந்த நான்காவது பிரிவில், மிக உண்மையோடும், விசுவாசத் தோடும் தேவனுடைய பிள்ளைகளாய் இருந்தவர்கள், தாங்கள் இந்த மன்னிக்க முடியாத பாவத்தைச் செய்துவிட்டோமோ வென்று பயந்திருந்ததை நான் கண்டேன். இப்படிப்பட்ட போராட்டங்களுடைய ஒரு சகோதரி மூன்று ஆண்டளவாக அடிக்கடி - சிலமுறை வாரம் ஒன்றிரண்டு தடவைகூட -

என்னை அழைத்து இப்பாவத்தை தான் செய்யாதிருக்கிறோமா என்று உறுதிப்படுத்திக் கொண்டாள்.

இந்தப் பகுதி அல்லது இந்தப் பாவத்தைப் பற்றி அறிய வேண்டிய ஒவ்வொரு விஷயமும் அல்லது எல்லா விஷயங் களும் எனக்குத் தெரியாது. ஆனால் கடந்த சில வருடங்களில் நான் இதுபற்றி பின்வரும் சில விஷயங்களைக் கற்றுள்ளேன்: (1) பரிசுத்த ஆவிக்கு விரோதமாக மதியீனமாக ஏதேனும் நினைத்துப் பேசுவது மட்டும் அல்ல, ஏதோ ஒரு முறை சிலவற்றைப் பேசிவிடுவதால் இந்தப் பாவம் நிலைப்படுவதல்ல. (2) நீங்கள் இந்தப் பாவத்தைச் செய்து விட்டோமோ என்று கவலைப் படுவதினால் இந்தப் பாவத்தைச் செய்தவர்கள் ஆவதில்லை. (இந்தக் கூற்றுகளுக்கான விளக்கம் இனி நாம் காணப்போகும் பகுதியில் தெளிவாக உள்ளதென்று நான் நம்புகிறேன்).

நாம் மத்தேயு 12ம் அதிகாரத்தை எடுத்துக் கொள்வோம். (நீங்கள் இதன் இணை வசனப்பகுதியான மாற்கு 3ம் அதிகா ரத்தை[2] எடுத்துக் கொண்டு அதில் அநேகம் கருத்துக்கள் உள்ளன என்பதைக் குறிப்பிடலாம்).

இயேசு, மாபெரும் கலிலேய ஊழியத்தில் முனைப்புடன் ஈடுபட்டிருந்தார். அச்சமயத்தில் அவர் அநேகமாக கப்பர் நகூமுக்குத் திரும்ப வந்திருக்க வேண்டும். “அப்பொழுது, பிசாசு பிடித்த குருடும், ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான்; குருடும், ஊமையுமானவன் பேசவுங் காணவுந் தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார்” (வ. 22). இது ஒரு மும்மடங்கு அற்புதமாகும்: இயேசு இந்தக் குருடனை காணும்படி செய்தார்; ஊமையாயிருந்த அவனைப் பேசும்படி செய்தார், மேலும் அவனில் இருந்த பிசாசைத் துரத்தினார்.

ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: “தாவீதின் குமாரன் இவர்தானோ?” என்றார்கள் (வ. 23). NIV மொழிபெயர்ப்பில் “இவர் தாவீதின் மகனாய் இருக்கக் கூடுமோ?” என்று ஜனங்கள் கேட்டார்கள் எனக் காண்கின்றோம். “தாவீதின் மகன்” என்ற கூற்று மேசியாவைக் குறிக்கும். ஜனங்கள், “இயேசு மேசியா செய்யும் பணிகள் எல்லாவற்றையும் செய்கிறார், ஆனால் நாம் மேசியாவைப் பற்றி நினைத்திருப்பது போல் ஆடம்பர உடை யணிவதில்லை. அவர் மிகுந்த புகழ்ச்சியோடும், விளம்பரச்

சூழ்நிலையோடும் வரவில்லையே'' என்று கூறிக் கொண்டிருந்தனர். அவர்கள் இருதயத்தில் ஒரு கேள்வியிருந்தது. அவர்கள், இயேசு மேசியாவாக இருக்கலாம் என்றெண்ணினர். ஆனால் அதைக்குறித்து உறுதியான முடிவெடுக்கவில்லை.

## களங்கப்படுத்தும் முன்னுரை (மத்தேயு 12:24-30)

"களங்கப்படுத்தும் முன்னுரை'' என்று நான் நமது வேத பாடத்தில் முதற் பகுதியை அழைக்கும் பகுதிக்கு வந்துள்ளோம். வசனம் 24, "பரிசேயர் அதைக் கேட்டு" என்று தொடங்குகிறது. பரிசேயர்கள் செய்த பாவத்தை இயேசு மன்னிக்க முடியாத பாவம் என்று கூறுவதால், நாம் அவர்களைப் பற்றி அறியவேண்டியது அவசியமாயுள்ளது. ஒவ்வொரு விஷயத்தையும் நிலைநிறுத்தி வைப்போம். மத்தேயு 11க்குத் திரும்பிச் சென்று பரிசேயர்கள் இயேசு செல்லுமிடமெங்கும் பின்சென்ற நிகழ்ச்சியைக் கவனியுங்கள். அவர்கள் இயேசுவைக் குறை கூறினர்; அவரைச் சிக்க வைக்க முயன்றனர்; அவரைக் குறித்து தங்களால் முடிந்த வரை கனவீனமாய்ப் பேசினர். மத்தேயு 11:19ல் அவர்கள் அவரை "போஜனப் பிரியனும், மதுபானப் பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும், பாவிகளுக்கும் சிநேகிதன்" என்று கூறினார்கள். மத்தேயு 12ம் அதிகாரம் முதல் பாகத்தில் அவர்கள், இயேசு ஓய்வுநாள் பிரமாணத்தை மீறுவதாக இரு முறை அவருடன் முரண்பாடாய்ப் பேசினார்கள். இது முக்கியமான ஒரு வசனமாகிய மாற்கு 12:14ல் நமக்கு தெளிவாகிறது: "அப்பொழுது பரிசேயர் வெளியே போய், அவரைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினார்கள்.''

மன்னிக்க முடியாத பாவம் குறித்து இயேசு கூறும் வார்த்தைகளை நாம் நெருங்கும் இவ்வேளையில், தேவன் பேரில் விசுவாசமாயிருக்கும் அவருடைய பிள்ளைகள் சில வேளைகளில் இயேசுவின் ஊழியம் பற்றி தவறுதலாய் சொல்கின்ற மதியீனமான, எதிர்ப்புள்ள சில வார்த்தைகளை அவர் குறிப்பிடவில்லை என்றறிய வேண்டும். இவ்வழியில் அநேக காலம் தொடர்ந்து எதிர்த்து நின்ற ஜனங்களையே இது

குறிக்கிறது. மத். 12:24ல் பரிசேயர்கள் கூறியது அவர்கள் மேற்கொண்ட பாதையின் இயற்கையான வெளிப்பாடாய் இருக்கின்றது.

நாம் இப்போது 24ம் வசனத்தை முடிப்போம்: பரிசேயர் அதைக் கேட்டு; “இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல் செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் வேறல்ல” என்றார்கள். இயேசுவின் அற்புதங்களுக்கு மூன்று குணாதிசயங்கள் இருந்தன: (1) அவைகள் தாமதமின்றி நடந்தன, (2) அவைகள் முழுமையாக இருந்தன, மற்றும் (3) அவைகள் நம்பக்கூடியவைகளாக இருந்தன. இயேசு அற்புதங்களைச் செய்தார் என்பது யாராலும் மறுக்க முடியாதது. அவர் அற்புதங்களைச் செய்து கொண்டிருந்தார் என்பதை அவருடைய எதிரிகளும் மறுக்க முயற்சிக்கவில்லை. மாறாக, “ஆம், ஆனால் அவர் மாந்திரீத்தினால் செய்து கொண்டிருக்கிறார்” என்றார்கள். இந்த விஷயத்தில், “பெயெல்செபூல்” என்பது “சாத்தானோடு” இணைக்கப்பட்டு சொல்லப்பட்டிருக்கிறது. பரிசேயர்கள், “இயேசு, சாத்தானுடன் ஒரு கூட்டுறவு வைத்திருப்பதினாலேயே அவரால் ஆவிகளைத் துரத்த முடிந்தது” என்றனர்.

இந்த தேவதூஷணமான மதியீனம் இயேசுவின் மரணத்தோடு முடிவடையவில்லை. சபை சரித்திர வல்லுநர்கள் கூற்றுப்படி: அதற்குப் பின் அநேக வருடங்களாகக் கூட யூத மார்க்கத்தார், இயேசுவை மாயக்காரர் அல்லது சூனியக்காரர் என்றே தொடர்ந்து கூறியுள்ளனர். அவரது அற்புதங்களை அவர்களால் மறுக்க முடியவில்லை; மாறாக அவ்வற்புதங்கள் பரிசுத்தமற்ற ஒரு வல்லமையால் செய்யப்பட்டதாகவே அவர்கள் கூறினர்.

25ம் வசனத்தின்படி, இயேசு, பரிசேயர்களின் சிந்தனைகளை அறிந்தவராய் இருந்தார். அவர் கேட்கும்படி அவர்கள் இந்த தேவதூஷணத்தைக் கூறவில்லை; வேறிடங்களில் இயேசுவை அவமதிப்புச் செய்யும் வகையில் இதைக் கூறினார்கள். எப்படி இருப்பினும், இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்தவராயிருந்தார். எனவே, இயேசு அவரைப் பற்றிக் கூறப்பட்ட சில வார்த்தைகளுக்காக மட்டும் பதில் கொடுக்கவில்லை என்பதை தயவு செய்து கவனியுங்கள். இயேசு

அவர்கள் இருதயங்கள் மற்றும் சிந்தனைகள் ஆகியவற்றை உற்றுக் கவனித்தார். இதற்கே அவர் பதில் அளித்தார்.

"இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி." அவர்கள் கூறுவது மதியீனமானதென்பதற்கு மூன்று வாதங்களை இயேசு முன் வைத்தார். அதில் முதலாவது வாதம், "நீங்கள் கூறுவது தர்க்கப் பொறுத்தமற்றது" என்பதாகும்.

> "தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும், எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது. சாத்தானை சாத்தான் துரத்தினால், தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலை நிற்கும்" (வ. 25ஆ-26), என்று அவர் சொன்னார்.

அவர்கள் கூற்று உண்மையென்றால், சாத்தான் தனக்கு விரோதமாகத் தானே ஒரு உள்ளான யுத்தத்தில் ஈடுபட்டுள்ளான் என்றாகிறது. அவன் தன்னைத் தானே அழிக்கும் செயலில் இறங்கியுள்ளான் என்று பொருள்படுகிறது. இது, சாத்தான் அறிவற்றவன் என்று கூறுவதற்கு ஒப்பாகும். சாத்தானைப் பற்றி எதை வேண்டுமானாலும் நாம் கூறலாம். ஆனால் அவனது அறிவை நாம் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. அவன் துன்மார்க்கமானவன்தான் - ஆனால் அறிவற்றவனல்ல. எனவே இயேசு, "நீங்கள் கூறுவது தர்க்கப் பொருத்தமற்றது" என்றார்.

இரண்டாவதாக, "அவர்கள் கூறுவது முரண்பாடானது" என்று இயேசு சொன்னார். "நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந் தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்" (வ. 27). பிசாசுகளைத் துரத்துதல் யூதர்கள் மத்தியில் அந்நாட்களில் பொதுவாக நிலவி வந்த ஒரு பழக்கமாகும். இதற்கு சில எடுத்துக் காட்டுகளை அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் காணலாம். இருப்பினும், உலக வரலாறுகூட யூதர்கள் செய்த இந்த செய்கை இயேசுவும் அவர் சீஷர்களும் செய்ததுபோல இருப்பதாகக் கூறுவதில்லை. யூதர்கள், பிசாசுகளைத் துரத்தும் செயலானது ஒரு சூனிய வித்தை போன்றது, அதில் அநேக சடங்குகள் மற்றும் நீண்ட நேரம், சில மாந்திரீகப் பொருள்களைப் பயன்

படுத்திச் செய்தல் ஆகியவை கொண்டிருக்கும். இயேசு, சாத்தானிடம், ‘‘வெளியேறு’’ என்று கூறியவுடன் அவன் வெளியேறுவது முற்றிலும் மாறுபட்ட ஒரு செயலாகும். இருப் பினும் யூதர்கள், தங்கள் பிள்ளைகளும் அசுத்த ஆவிகளைத் துரத்துவதாக கூறினர். இயேசுவின் வாதத்தைப் பொறுத்த மட்டில், அவர்கள் உண்மையாக சாத்தானைத் துரத்தினார்களா அல்லவா என்பதில் பெரிய வேறுபாடு ஒன்றுமில்லை. ஆனால் பரிசேயர்கள், அதை அவர்கள் செய்வதாக நம்பினார்கள் என்பதே முக்கிய கருத்தாகும். இவ்விதமாய், அவர்களின் வாதத்தையே அவர்களுக்கெதிராகப் பயன்படுத்தினார். அதன் தர்க்கரீதியான விளைவைச் சுட்டிக்காட்டி அது எவ்வளவு அபத்தமானது என்று விளக்கினார். இயேசு, “நான் சாத்தானின் வல்லமையால் பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளை களும் அதே போலத் தான் துரத்துபவர்களாயிருக்க வேண்டும்!” என்றார். பரிசேயர்கள் இதை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை. இவ்விதமாக இயேசு அவர்கள் கூறுவது முரண் பாடானது என்று விளக்கினார்.

தொடர்ந்து இயேசு: “நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்க ளிடத்தில் வந்திருக்கிறதே’’ (வ. 28) என்றார். இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டதாக அவ்விடத்தில் இயேசு கூற வில்லை; அப். 2ம் அதிகார சம்பவத்திற்கு முன்னதாக இராஜ்யம் ஸ்தாபிக்கப்படவில்லை. ஜனங்கள் கொண்டிருந்த தோராய மான முடிவு சரியானது என்பதையே இயேசு இவ்விடத்தில் ஆமோதித்தார். மேசியா வர வேண்டியிருந்தது. சங்கீதம் 2 மற்றும் அநேக வசனப் பகுதிகள் மேசியா ஒரு ராஜாவாக வரு வார் என்று கூறுகின்றன: ராஜா வந்துவிட்டால், ராஜ்யமும் வந்திருப்பதாகத் தான் பொருளாகிறது. இவ்விதமாக பெயல் செபூலின் வல்லமையினால் அல்ல, மாறாக இராஜாவாக வந்துள்ளவராலேயே பிசாசுகள் துரத்தப்படுவதாக இயேசு கூறினார். அவர்கள் எதிர்பார்த்த இராஜா வந்திருந்தார்! அவர்கள் தங்கள் கண்கள் மற்றும் இருதயங்களைத் திறந்தால் மட்டுமே அதைக் காண முடியும்!

வசனம் 28ல் “தேவனுடைய ஆவியினால்” என்ற வார்த்தை களை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள். இயேசு, ‘‘நான்

பெயெல்செபூலின் ஆவியினாலல்ல, தேவனுடைய ஆவியினா லேயே இதைத் செய்கிறேன்" என்று வலியுறுத்தினார்.

இயேசுவின் மூன்றாவது வாதம், "நீங்கள் கூறுவது சாத்திய மற்ற ஒரு விஷயம்" என்கிறார். அவர், "பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடமைகளை எப்படிக் கொள்ளையிடக் கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம்" (வ. 29) என்றார். மாற்கு 3ல் கூறுகிறபடி, இச்சுருக்கமான உவமையில், பலவான் என்றழைக்கப்படுபவன் சாத்தான் ஆவான். உங்கள் எதிராளியை ஒருபோதும் குறைவாக மதிப்பிட்டுவிட வேண்டாம்; சாத்தான் ஒரு பலமான எதிரி என்றழைக்கப் படுகிறான். இருப்பினும் இயேசுவின் விளக்கத்தில், மிகப் பலவான் வந்து அவனைக் கட்டிப்போட்டு அவனது வீட்டைக் கொள்ளையிடுவதாகக் கூறப்படுகிறது. இயேசு பிசாசுகளைத் துரத்தியபோது இந்தக் காரியத்தையே செய்தார்.

சாத்தானைக் கட்டுவது என்கிற இவ்விஷயம் கவர்ச்சி கரமானதாயுள்ளது. சாத்தானைக் 'கட்டுதல்' என்ற இச்செயல் மனிதன் மீது சாத்தானுக்குள்ள வல்லமை மற்றும் செல்வாக்கை மட்டுப்படுத்துகிறது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது சாத்தான் கட்டப்பட்டான். மனித குலத்தின்மீது சாத்தா னுக்கிருந்த அளவற்ற வல்லமையை இயேசுவின் சிலுவை மரணம் உடைத்தெறிந்தது.[3] ஒருவகையில் இயேசு வனாந் தரத்தில் சாத்தானால் சோதிக்கப்படுகையிலேயே அவனைக் கட்டும் செயல் தொடங்கி விட்டது - அது இயேசுவின் ஊழியத் தில் தொடர்ந்து நடந்தது. அவனைச் சுற்றிய கயிறு இறுக்க மாக்கப்பட்டு, சிலுவை மரணத்தின் போது முடிச்சிடப் பட்டது.

சாத்தானின் மீது தனக்குள்ள வல்லமையைக் காண்பிக்க இதைத் தவிர வேறு வழியே இல்லையென்று இயேசு வலியுறுத் தினார். அவர் சாத்தானின் வல்லமையால் அல்ல, சாத்தான் மீது தனக்குள்ள அதிகாரத்தைக் காண்பிக்கவே இவைகளை நிறை வேற்றினார்.

அவருக்கும், சாத்தானுக்குமிடைய ஒரு பெரிய யுத்தம் நடப் பதாக அவர் கூறினார். அடுத்த வசனத்தில், அவர், இந்த ஆவிக் குரிய யுத்தத்தில் ஒவ்வொரு நபரும் ஏதேனும் ஒரு பக்கம் இருந்

தேயாக வேண்டும் என்று கூறினார்: “என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்” (வ. 30). இயேசு, தமது இராஜ்யத்தை ஸ்தாபிப் பதற்காக தயார் செய்ய, சீஷர்களைச் சேர்க்க முயற்சி செய்து கொண்டிருந்தார். மறுபுறம், பரிசேயர்கள் அவரைக் கனவீனப் படுத்தி, அவருடைய சீஷர்களைச் சிதறடித்து, அவர்கள் இயேசு வைப் பின்பற்றுதலை விட்டுவிடும்படி செய்ய முயற்சியை மேற்கொண்டார்கள். இயேசு (அன்றைய பரிசேயர்களுக்கு மட்டுமல்ல, இன்றைக்கு இதைக் கவனிக்கின்ற நமக்கும்கூட) இவ்விதம் கூறுகிறார்: “நீங்கள் எந்தப் பக்கம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்யுங்கள்.’’ இயேசு கிறிஸ்துவிடம் வரும் போது, நடுநிலைமையான ஒரு ஸ்தானத்தை வகிப்பதெல்லாம் நடவாது.

## திகைப்பூட்டும் அறிவிப்பு (மத்தேயு 12:31-32)

வசனங்கள் 31-32ல் உள்ள “திகைப்பூட்டும் அறிவிப்புக்கு” நாம் தயாராகின்றோம்.

வசனம் 31ல், “ஆதலால் (தற்போது நடந்தவற்றின் அடிப் படையில், அவர்கள் மற்றும் தாம் கூறிய கூற்றுக்களின் அடிப் படையில்) நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்,’’ இயேசு இவ்விடத்தில், “நான் இப்போது கூறப்போகிற பாவத் தைத் தவிர, வேறு எந்தப் பாவமும், எந்த தூஷணமும் மனுஷ னுக்கு மன்னிக்கப்படும்” என்று கூறினார்.

இயேசு குறிப்பிடக் கூடிய “தேவதூஷணம்” என்பது என்ன? “தேவதூஷணம்” என்ற மொழிபெயர்ப்பு வார்த்தையின் மூல வார்த்தை “எதிராகப் பேசுதல்” என்ற பொருள் தருவதாயிருக் கிறது. தேவனுக்கெதிராகப் பேசுவது மற்றும் பரிசுத்தமானவை களைக் கனவீனப் படுத்தும் விதத்தில் நடத்துதல் ஆகியவை விசேஷமாய் தேவதூஷணம் என்று குறிப்பிடப்படுகின்றன. பழைய ஏற்பாட்டில், தேவதூஷணம் என்பது மரணதண்டனை கொடுக்கத்தக்க பாவமாகும். இதற்கு மாறாக “எந்த பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்’’ என்று

*இயேசு கூறினார். பவுல் தேவதூஷணம் செய்து குற்றவாளி யான போதிலும் மன்னிக்கப்பட்டார் (1 தீமோத்தேயு 1:13, 15).*

*எந்த தூஷணமும் மன்னிக்கப்படும் என்று கூறிய பிறகு, இயேசு, ''ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மன்னிக்கப்படுவதில்லை'' (வ. 31ஆ) என்றார். இது பயப்படத் தக்கதாய் இருக்கிறதல்லவா?*

*அடுத்த வசனத்தில் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணத்தைப் பற்றி நாம் இன்னும் அதிகமாகக் கற்றுக் கொள் கிறோம்: ''எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால், அது இம்மையிலும், மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவ தில்லை'' (வ. 32).*

*மன்னிக்க முடியாத பாவம் பற்றி காலங்களினூடே அநேக வகையான கொள்கைகள் வடிவாக்கப்பட்டுள்ளன. இது விபசாரம் என்று சிலர் கூறினர். இது கொலை என்று சிலர் கூறினர். தற்கொலைதான் மன்னிக்க முடியாத குற்றம்; ஏனெ னில் ஒருவன் தன்னையே கொலை செய்து கொண்டால் அந்தப் பாவத்திலிருந்து மனந்திரும்புவதற்கான வாய்ப்பு அவனுக் கிருப்பதில்லை என்று ஒரு பொதுவான கொள்கை காலங்களி னூடே நிலவி வந்தது. எப்படியிருப்பினும், மன்னிக்க முடியாத பாவம் என்பது மன்னிக்கக் கூடாத பாவம் அல்ல. இயேசு, ஒரு மனிதன் பாவம் செய்த பிறகு அவன் வாழ்ந்தாலும் மரித்தாலும் அப்பாவம் மன்னிக்கப்பட முடியாத நிலையைப் பற்றி இவ் விடத்தில் கூறுகிறார்.*

*இந்தப் பாவம் எது என்று நாம் யூகிக்கத் தேவையில்லை. அதைப்பற்றி இயேசுவே கூறியுள்ளார்: ''பரிசுத்த ஆவியான வருக்கு விரோதமாகப் பேசுவதே'' அப்பாவமாகும். வசனம் 28ல் இயேசு ''தேவனுடைய ஆவியினாலேயே'' பிசாசுகளைத் துரத்துவதாக கூறினார். ஆனால் அவர் பெயெல்செபூலின் வல்ல மையினால் பிசாசுகளைத் துரத்துவதாகப் பரிசேயர்கள் கூறினர். ஆக, தேவனுடைய ஆவியானவரை, பரிசேயர்கள் பெயெல் செபூல் என்றனர்.*

*''இயேசு இதைப்பற்றித்தான் பேசினாரா'' என்று நீங்கள்*

யாரேனும் கேட்கலாம். இதன் இணைவசனப் பகுதியான மாற்கு 3ஐ சற்றுப் பாருங்கள். மன்னிக்க முடியாத பாவத்தைப் பற்றி அடிப்படை விளக்கங்கள் சிலவற்றை வசனங்கள் 28-29 ல் கூறிய பின்பு, 30ம் வசனத்தில் பின்வரும் விளக்கமளிக்கிறார்; அசுத்த ஆவியைக் கொண்டிருக்கிறான் என்று அவர்கள் சொன்னபடியினாலே அவர் இப்படிச் சொன்னார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இயேசு பரிசுத்த ஆவியைக் கொண்டிருக்கவில்லையென்றும், அவர் அசுத்த ஆவியைக் கொண்டிருக்கிறார் என்றும் கூறியதால் பரிசேயர்கள் மன்னிக்க முடியாத பாவத்தைச் செய்தார்கள்.

மத்தேயு 12:32க்குத் திரும்புவோம்: இயேசு, "அது இம் மையிலும், மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" என்று கூறினார். என்றால், மறுமையில் பாவங்கள் மன்னிக்கப் படுதல் உண்டென்று பொருள்படுமா? இல்லை. இயேசு, "அப் பாவம் என்றென்றும் மன்னிக்கப் படாது" என்று வலியுறுத்திக் கூறினார்.

சிலர், பரிசேயர்கள் இந்த மன்னிக்க முடியாத பாவத்தைச் செய்யவில்லை; ஆனால் இயேசு பின்வருமாறு கூறியதாக எண்ணுகின்றனர்: "நான் பூமியிலிருக்கும் போது என்னை நீங்கள் மறுதலிக்கலாம். பரிசுத்த ஆவியானவர் வந்து புதிய ஏற்பாட்டை வெளிப்படுத்தும்போது அவ்வெளிப்பாட்டை நீங்கள் மறுதலித்தால் அது உங்களுக்கு மன்னிக்கப்படாது." ஒரு வேளை இயேசு இதையே கூறியிருக்கலாம். ஆனால் பரிசே யர்கள் இப்பாவத்தைச் செய்யவில்லை என்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நீங்கள் இவ்வசனப் பகுதியை இலேசாக வாசித்தாலே, அவர்கள் இப்பாவத்தைச் செய்தது விளங்கும். இயேசுவின் வார்த்தைகள் சாதாரண எச்சரிக்கை வார்த்தைகள் அல்ல. மத்தேயு 23ல் பரிசேயர்களைப் பற்றிய தான இயேசுவின் மதிப்பீட்டைப் பாருங்கள். அவை யாவும் இழிவான காரியங்களாகும்.

"எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமாக வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும், மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" என்று இயேசு கூறியதன் பொருள் என்ன?

மத்தேயு 11ம் அதிகாரத்திற்குத் திரும்புவோம்: பரிசேயர்கள் இயேசுவை போஜனப் பிரியன் என்றும், மதுபானப் பிரியன் என்றும் கூறினர். 12ம் அதிகாரத்தில், அவர் ஓய்வுநாளை மீறியதாகக் குற்றம் சாட்டினர். வசனம் 12:14ல், "பரிசேயர் வெளியே போய், அவரைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினார்கள்." இவை யாவும் இயேசு என்ற மனிதருக்கு எதிரான காரியங்களாகும். இதன் பிறகு அவர்கள், இயேசு பிசாசின் வல்லமையினால் பிசாசு களைத் துரத்துகிறார் என்றனர் (வ. 24). அப்பொழுதுதான் இயேசு, "நீங்கள் மிகவும் மோசமாகிவிட்டீர்கள்; இப்பொழுது நீங்கள் என்னை மட்டும் எதிர்க்கவில்லை; என்னிடத்தில் உள்ள தேவ வல்லமையை, சாத்தானுடைய வல்லமை என்று தூஷிக் கிறீர்கள். இதை நான் தேவனுடைய ஆவியினால் செய்கின் றேன், ஆனால் நான் அசுத்த ஆவியினால் இதைச் செய்வதாக நீங்கள் கூறுகிறீர்கள். பரிசுத்த ஆவியை, சாத்தான் என்று நீங்கள் கூறுவது உங்கள் இருதய கடினத்தையும், ஆவிக்குரிய நிலையில் நீங்கள் மனந்திரும்ப இயலாத நிலையை அடைந்ததையும் காட்டுகின்றது!"

அந்தத் தனி நபர்கள் செய்த இந்தக் குறிப்பிட்ட பாவத்தை இன்றைய நாட்களில் நீங்கள் செய்ய முடியாது. அன்று போல இன்று இயேசு இப்பூமியில் நடந்து, அற்புதங்களைச் செய்வ தில்லை. எனவே அவரைச் சுட்டிக்காட்டி நீர் பெயெல்செபூ லின் வல்லமையால் அற்புதங்கள் செய்கிறீர் என்று நாம் கூற முடியாது, எனவே அக்குறிப்பிட்ட பாவத்தை நீங்கள் செய்ய முடியாது. ஒருவேளை, யூதர்கள் செய்த அதே பாவத்தை நீங்கள் செய்ததாக ஒரு எண்ணம் உங்களுக்கு இருந்ததென்றால், அதை மறந்துவிடுங்கள்; ஏனென்றால் அப்படிப்பட்ட பாவத்தை நீங்கள் செய்ய முடியாது.

பொதுவான இப்பாவத்தை நீங்கள் செய்ய முடியாதென் றாலும், இதன் வகையைச் சேர்ந்த சில பாவங்களை செய்யக் கூடும். மறுபடியும் மாற்கு 3ம் அதிகாரத்திற்குத் திரும்புவோம். வசனம் 29ல் "ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷ ணம் சொல்வானாகில், அவன் என்றென்றைக்கும் மன்னிப் படையாமல், நித்திய பாவத்திற்கான குற்ற உணர்வுள்ள வனாயிருப்பான்" என்று கூறப்படுகிறது. இவ்வசனப்பகுதி

குறிப்பிட்ட நித்திய பாவத்தின் குற்ற உணர்வைப் பற்றிக் கூறாமல், நித்திய பாவத்தின் குற்ற உணர்வை[4] அடைவான் என்று கூறுவதாயுள்ளது. சில பாவங்கள் நித்திய பாவங் களாகும். சில பாவங்கள் என்றைக்கும் விடமுடியாதவை யாகும்; சில பாவங்கள் என்றென்றும் மன்னிக்க முடியாதவை யாகும்.

யோவான் தமது முதலாம் நிருபத்தில் இவ்வகையான பாவத்தைப் பற்றி பேசுகிறார்:

> மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக் கடவன்; அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு அதைக் குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன். அநீதியெல்லாம் பாவந்தான்; என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு (1 யோவா. 5:16-17).

"மரணத்துக்கேதுவான பாவம்" என்ற பதத்தைக் கவனியுங்கள். நீங்கள் பாவம் செய்தால், எதிர்கொள்ள வேண்டியது மரணம் என்ற ஒன்றுதான். (மத்தேயு 12 ஐப் போலவே இதுவும் பயப்படத்தக்கதாய் இருக்கிறதல்லவா?)

"மரணத்துக்கு ஏதுவான பாவம்" என்றால் என்ன? "நித்திய பாவம்" என்றால் என்ன? நாம் அடுத்த பகுதிக்குச் செல்வோம்.

## தெளிவான முன் மொழிதல் (மத்தேயு 12:33-35)

"மத்தேயு 12ன் அடுத்த பகுதியில், நாம் "தெளிவான முன் மொழிதலை" காண்கிறோம்.

பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் சிலர் பேசுவதைப் பற்றிய தமது கூற்றுக்குப் பிறகு இயேசு தமது விருப்பத்திற்குரிய விளக்கத்தைத் தருகின்றார்: "மரம் நல்லதென்றால், அதன் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதன் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதன் கனியினால் அறியப்படும்" (வ. 33). அவர், "நீங்கள் எனது குணத்தை எனது கனிகள் மற்றும் எனது வாழ்க்கையினால்

அறியலாம். நான் ஜனங்களைக் குணப்படுத்துகிறேன், ஜனங்களுக்கு உதவி செய்கிறேன், பிசாசுகளைத் துரத்துகிறேன். எனது கனி நல்லதென்பதால் எனது இயல்பும் நல்லதென்று அறியலாம். ஆனால் பரிசேயருடைய நிலை என்ன? அவர்களது வாழ்க்கையின் கனிகள் கெட்டதாயிருப்பதால், அவர்கள் கெட்டவர்களே" என்று கூறினார்.

பெயெல்செபூலின் வல்லமையினால் இயேசு அசுத்த ஆவிகளைத் துரத்துகிறார் என்று பரிசேயர் சொன்ன ஒரு குற்றச்சாட்டை மட்டும் வைத்து இயேசு பேசவில்லை என்பதைக் கவனியுங்கள். மாறாக, பரிசேயர்களின் வாழ்க்கை முறை முழுவதையும் வைத்து அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று கூறினார்!

வசனங்கள் 34 மற்றும் 35ல் அவர் தொடர்ந்து கூறுகிறார்:

> விரியன்பாம்புக் குட்டிகளே (பரிசேயர்களைப் பற்றி இயேசுவும், யோவானும் இவ்விதமாகவே பேசினர்[5]), நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான்."

பரிசேயர்கள் தேவதூஷணமாய்ப் பேசினார்கள், ஆனால் இந்த தேவதூஷணமான வார்த்தைகள் எங்கிருந்து உண்டாயின? அவ்வார்த்தைகள் அவர்களின் இருதயங்களிலிருந்து உண்டாயின. இயேசு அவர்களின் இருதயங்களை அறிந்திருந்தார் என்பதை நினைவு கூருங்கள் (வ. 25). அவர்கள் பேசின சில வார்த்தைகளை பற்றி மாத்திரம் இயேசு கூறவில்லை. ஆனால் அவர்களின் இருதயங்களின் நிலை பற்றி இயேசு குறிப்பிட்டார்.

மத்தேயுவின் அடுத்த அதிகாரத்தை ஒரு பார்வையிடுங்கள்: 13ம் அதிகாரம் விதைப்பவன் உவமையுடன் தொடங்குகிறது. முதலாவதாக இவ்வுவமையில் இயேசு, வசனமாகிய விதை முளைக்க முடியாத கடினமான பாதை நிலத்தைக் குறிப்பிடுகிறார். இவ்விதமாய் பறவைகள் (சாத்தான்) வந்து கொத்திப் போகும்வரை வசனமாகிய விதை அங்கேயே கிடந்தது. பரிசேயர்களின் இருதயம் வசனத்தை ஏற்றுக் கொள்ளாத நிலையில் இருப்பதை இயேசு இவ்விதமாய் விளக்கினார்.

இதற்குச் சற்றுப்பின்னர், இயேசு பின்வருமாறு கூறுகிறார்:

> இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள் என்பதே (மத்தேயு 13:15).

இயேசு பரிசேயர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் பேசின சில வார்த்தைகளைப் பற்றியல்ல மாறாக, அவர்களுடைய இருதயங்களின் நிலை பற்றிப் பேசினார். அவ் வார்த்தைகள், அவர்களின் இருதய கடினத்தைக் குறிப்பிடுவதா யிருந்தன. அவர்கள் மறுபடி, மறுபடி அவருக்கு எதிராகப் பேசிக்கொண்டிருந்தனர். இருப்பினும் இயேசு விசேஷமான இந்த மும்மடங்கு அற்புதத்தைச் செய்தபோது அதை சாத்தா னால் செய்தார் என்று அவர்கள் கூறினபோது, அவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி, மனந்திரும்ப இயலாத நிலையை அடைந்து விட்டதாக இயேசு கூறினார். எனவே அவர்கள் மன்னிக்கப்படக் கூடாதிருந்தது.

நீங்கள் மனந்திரும்புகிற எந்தப் பாவமும் உங்களுக்கு மன்னிக்கப்படக்கூடும் என்பதை நான் மிகவும் வலியுறுத்திக் கூற இயலாது. தேவனைக் குறித்து மிகக் கொஞ்சமாகவும், மனு ஷரைக் குறித்து அதிகமாகவும் ஒரு தனி நபர் பேசினால் அது தேவனால் மன்னிக்கக் கூடாததாயுள்ளது. இதைத் தனி நபர் எவரும் செய்யக் கூடும். தேவன் நீங்கள் மனந்திரும்புகிற எந்தப் பாவத்தையும் மன்னிக்கக் கூடும்.

பரிசேயருடைய இருதயம் கடினமடைந்தது போலவே உங் கள் இருதயங்களும் கடினமடையக் கூடும் என்ற உண்மை நிலை நிற்கிறது. பாவத்திலிருந்து மனந்திரும்பாத ஒரு நிலையை நீங்கள் அடையக் கூடும். ஜெபத்துடனும், ஜாக்கிரதை யுடனும் எபிரெயர் 6:4-6ஐக் கவனியுங்கள்:

> ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புகிறதற்கேதுவாய்

அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.

இந்த முக்கியமான வசனத்தைக் கவனியுங்கள்: ''மனந்திரும்பு கிறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.'' இந்நிலையை அடைவது சாத்தியமே. நீங்கள் சுவிசேஷத்தை மறுதலிக்க முடியும், உங்களுக்கு உதவுபவரை நீங்கள் எதிர்க்க முடியும், நீங்கள் இப்படிச் செய்யும் ஒவ்வொரு தடவையும், உங்கள் இருதயம் இன்னும் சற்று அதிகமாய்க் கடினமடைகிறது (உணர்வற்று, இறுகிப் போகிறது) - இது ஆவிக்குரிய நிலையில் மனந்திரும்ப முடியாத நிலைவரை சென்று விடுகிறது.

எபிரெய எழுத்தாளர் இவ்விதமாய் எச்சரிக்கிறார்: *"ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், … உங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருங்கள்" (3:7-8ஆ).*

## முடிவுரை

நான் மறுபடியும் கூறுகின்றேன்: இவ்வகையான பாவத்தை நீங்கள் செய்திருப்பதாய்க் கவலைப்பட்டால், நீங்கள் இப் பாவத்தைச் செய்யவில்லை. ஏனென்றால், உங்கள் இருதயம் இன்னும் மென்மையாகவே, பாவம் பற்றிய கவலையுணர்வு கொண்டதாகவே இருக்கிறது.

ஆனால் பின் வருவது பற்றி நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்: நாம் பிடிவாதமாக பாவத்திலே ஏதோ ஒரு பாவத்தில்-நிலை நின்றுகொண்டு, "நான் யாரைப்பற்றியும், அவர்கள் சொல்வதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை, நான் இதை விரும்புகிறேன் எனவே இதைத் தொடர்ந்து செய்யப் போகிறேன்'' என்று கூறுவோமேயாகில்-நமது இருதயம் இன்னும் அதிகக் கடினமாகும். இவ்வாறு நடக்க நாம் அனு மதித்து விட்டால், நாம் மனந்திரும்பிக் குணப்பட இயலாத ஒரு நிலையை அடையக் கூடும். வேதம் இதில் தெளிவாயிருக்கிறது. நாம் மனந்திரும்பாவிட்டால் மன்னிப்படைய முடியாது.

இயேசுவைப்போல, நீங்களும் நானும் இருதயங்களை உற்று நோக்க இயலாது. ஒருவர் எப்பொழுது இந்நிலையை அடைகிறார் என்று நீங்களும், நானும் முடிவு செய்ய இயலாது;

*ஆனால் தேவன் இதை அறிவார். இது நடக்கும்போது தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்துவிடுகிறார் (ரோமர் 1:24). இது எவ்வளவு பரிதாபமான நிலை!*[6] *நமது இருதயங் களை மென்மையாகக் காத்துக்கொள்ள தேவன் எப்போதும் நமக்கு உதவுவாராக!*

---

குறிப்புகள்

[1]ஒரு வகுப்பு அல்லது பிரசங்கத்தில், ஜனங்கள் கைகளை உயர்த்தும்படி கேட்கலாம். [2]மாற்கு 3ம் இதே சம்பவத்தைக் கூறுகிறது. லூக்காவிலும் இது காணப்படுகிறது. ஆனால் லூக்காவில் நாம் இங்கு காண வேண்டிய விளக்கம் இந்தச் சம்பவத்தில் இல்லாமல் வேறு அநேக இடங்களில் உள்ளது - லூக்கா 12:10. [3]கொலோசெயர் 2:14-15; வெளி.12:10-11. [4]"An" என்ற பதத்திற்கு ஏற்ற வார்த்தை கிரேக்க மொழியில் கிடையாது. அதில் உறுதிச் சார்படைச் சொற்கள் எதுவுமேயில்லை ("the" என்றே மொழிபெயர்க்கப் பட்டிருக்கும்) இந்தப் பகுதி, "நித்திய பாவம் செய்த குற்றவுணர்வு" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கலாம். இது "நித்தியம்" என்ற வார்த்தையால் குறிக்கப் பட்டதாய் இருக்கும். [5]மத்தேயு 23:33. [6]இது ஒரு பிரசங்கமாகப் பயன்பட்டால், இதோ ஒரு நல்ல முடிவுரை: "நாங்கள் அழைப்பின் பாடல் ஒன்றைப் பாடப் போகிறோம். அழைப்பின் பாடல் என்பது அபாயகரமானது; ஏனெனில் அதற்கு இணங்க வேண்டியவர்கள் இணங்குவதில்லை, அவரது இருதயம் இன்னும் கடினமாகிறது. ஆனால் அடுத்த முறை வரும்போது இணங்குவது இன்னும் அதிக கடினமாகிவிடும். நீங்கள் இன்னும் மென்மையான மனச்சாட்சி உள்ளவர்களாய் இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன், ஜெபிக்கிறேன், தயவு செய்து உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதீர்கள்."